அசல்

8.11.92. தி. கதிரைத்தம்பி

✓ அசல் -1 நகல் -1

உ 8-11-92

[illegible]

அசல்

8.11.92. தி. கதிரைத்தம்பி.

✓ அசல் – 1 நகல் – 1

[illegible]

[illegible] (Value Payable post) [illegible]

[illegible]

அசல்

8.11.92. தி. கதிரைத்தம்பி.

✓ அசல் – 1 நகல் – 1

[illegible]

நகல்

8-11-92
கொடும்புத்தூர்

2

சிவமயம்

எங்கள் கனம்பொருந்திய பண்டித சிரோன்மணிகளாகிய ஸ்ரீ சாமிநாதையரவர்கள் திவ்ய சந்நிதிக்கு அடியேன் நமஸ்கரித்து விஞ்ஞாபனம்

ஐய,

கடவுளுடைய திருவருளினாலும் தங்கள் ஆசீர்வாதத்தினாலும் இவ்விடம் யாவரும் க்ஷேமம். அங்ஙனம் தாங்கள் க்ஷேமமாயிருக்கிற சமாசாரம் அறிய விரும்புகிறேன்.

தாங்கள் தயவு கூர்ந்து அனுப்பிய சிலப்பதிகாரப் பிரதி பெற்று அனுதினமும் அதன் சுவையமுதையுண்ணும் முயற்சியுடையேனாய், அதனால் என் கவலை சிறிது தணிந்திருக்கின்றேன். இந்நூல் விஷயத்தில் தாங்கள் பட்ட பிரயாசம் எத்துணைத் தென்பது, அதனை ஏட்டுப் பிரதியிற் பார்த்துத் தெளிந்தவர்கட்கே நன்கு விளங்கும். இந்நூல் விஷயமாகத் தாங்கள் நம் தமிழ்நாட்டார்க்குச் செய்த பேருபகாரம் மறக்கத்தக்கதொன்றன்று.

இப்பொழுது சீகாளத்திப்புராணம் அங்ஙனமே அச்சிடப்படுவதாக அறிகின்றேன். அதன் விலை யின்னதென்பது தெரியாமையால் அதனை அறிந்து தெரிவிக்கக் கேட்கிறேன். தங்களுக்கு அவகாசமிருப்பின் அதில் ஒரு பிரதி இந்த (Value payable Post) ஆக அஃ. துணையார் வாயிலால் அனுப்பினீர்களாயின் செலவு கொடுத்துப் பெற்றுக்கொள்வேன்.

மேலும் தாங்கள் இன்னும் இவ்வாறு என்னென்ன இலக்கியங்கள் அச்சிடத் தயாராயிருக்கிறீர்களென்பதை அறிய விரும்புகின்றேன்.

தங்கள் காலத்துள் இறந்து போகாது பட்டு இன்னும் உள்ளனவாயிருக்கின்ற அரிய தமிழ்நூல்களை அச்சிட்டுவைப்பீர்களாயின் அது பெரும்புண்ணியமேயாகும்

நகல்

மேலும் தமிழ்ப் பாவைக்கு ஒர் சிறந்த அகராதி அத்தியாவசியம் என்பது புலனாயாகிறது. இதைச் செய்து முடிக்க வல்லவர்களும் தாங்களே. இது தங்களுக்குப் பெரும் புண்ணியமும் புகழுமாக்கமுமாயிருக்கும்.

தங்கள் முயற்சிகள் இடையூடங்காது அனுகூலம் பெறும்படி சிவபரான்றிருனைப் பார்க்.

ஆக வேண்டியவைகளுக்குக் காத்திருக்கின்றேன்

இங்ஙனம்
தங்கள் பணிவுள்ள
தி. க. துரைத் தம்பி

நகல்

vi

8- 11- 92.

கொழும்புத்துறை - கதிரைத்தம்பி

சிலப். பாட்டு ✓

No. 29

4. 1. 71. Copied in
'த. ரு. Vol B'

Page ~~444 – 446~~
396 – 398.

(ரூ3.)